திருப்பாவை

474.

- செல்வம் கொழிக்கும் ஆயர்பாடியிலே உள்ள
  பாக்கியம் செய்த சிறு பெண்களே!
- அழகிய ஆபரணங்களை அணிந்து கொண்டிருப்பவர்களே!
- கூரிய வேல் ஏந்தி கொடிய தொழில் புரியும் நந்தகோபனின் குமாரனும்,
- அழகு பொருந்திய கண்களை உடைய யசோதையின் இளஞ்சிங்கம் போன்றவனும்,
- கரிய திருமேனியும், சிவந்த கண்களை உடையவனும்,
- சூரியனையும்,சந்திரனையும் போன்ற திருமுகத்தைக் கொண்டவனுமாகிய நாராயணன்,
- நாம் கோரும், நோன்பிற்கு வேண்டிய பறையைக் கொடுப்பான்.
- இந்த மார்கழி மாதப் பௌர்ணமியில், நீராட விருப்பம் உள்ளவர்கள் அனைவரும் வாருங்கள்

475.

- இவ்வுலகில் வாழ்வோர்களே!
- நம்முடைய பாவை நோன்புக்காக நாம் அனுசரிக்க வேண்டிய கடமைகளைக் கேட்பீராக,
- திருப்பாற்கடலிலே யோக நித்திரை புரியும் பரந்தாமனது திருவடிகளைத் துதிப்போம்.
- நெய்யும் பாலும் அருந்தமாட்டோம்.
- விடியற்காலையிலே குளிப்போம்.
- கண்களுக்கு அழகூட்டும் மையை இட்டுக் கொள்ளமாட்டோம்.
- கூந்தலில் பூச்சூடிக் கொள்ள மாட்டோம்.
- செய்யத்தகாத தீச்செயல்களைச் செய்யமாட்டோம்
- யாரிடமும் சென்று கோள் சொல்ல மாட்டோம்.
- யோகிகளுக்கும் தவசிகளுக்கும் தாமாகச் சென்று தர்மம் செய்வதும்,
- வீடு தேடி வரும் சந்நியாசிகளுக்கும், பிரம்மச்சாரிகளுக்கும் பிச்சையும் இயன்ற அளவு அளிப்போம்.
- இவை யாவும் விருப்புடன் செய்து நாம் கடைத்தேறும் வழியை நினைத்து மகிழ்வோம்

476.

- வாமனாவதாரத்தில் திருவிக்கிரமனாக ஓங்கி உயர்ந்து உலகத்தை மூன்று அடிகளால் அளந்த உத்தமனான திருமாலின் நாமங்களைப் பாடிப் பாவை நோன்பிற்காக நாம் நீராடினோமானால்,
- தீமையற்று, மாதம் மூன்று மழை நாடெங்கிலும் பொழியும்.
- செந்நெல் ஓங்கிப் பருத்து வளரும். அப்பயிர்களின் நெருக்க மிகுதியால் மீன்கள் துள்ளிக் குதித்துப் பாயும்
- அழகிய குவளை மலர்களில் வரிகளை உடைய வண்டுகள் தேனைக் குடித்த மயக்கத்தில் உறங்கிக் கிடக்கும்.
- தயக்கமின்றி அருகில் சென்று பெருத்த மடிகளைப் பற்றிக் கறக்க, வள்ளல்களைப் போன்ற பெரிய பசுக்கள் கறக்கும் வரை பால் சுரந்து குடங்களை நிரப்பும்.
- இத்தகைய செல்வங்கள் எல்லாம் நீக்கமற நிறைந்து கொழிக்கும்

477.

- கடல் போன்ற பெருமை வாய்ந்த மழைக்கு அதிபதியான வருண தேவனே !
- நீ ஒருசிறிதும் ஒளிக்காமல் கடல் ஆழத்திற்குச் சென்று நீரை முகந்து வந்து,
- வானவெளியில் பரவி ஊழிக்காலத்திலும் மாசற்று விளங்கும் திருமாலின் கருநிறமேனியைப் போல
- .....விளங்கிப் பெருமையும், எழிலும், வலிமையுமுள்ள பத்மநாபனின் வலக்கரத்தில் நிகழும் சக்கராயுதத்தைப் போல்
- .....ஒளியுடைனும், இடக்கையிலுள்ள வலம்புரிச் சங்கின் நாதத்தை ஒத்த முழக்கத்துடனும்
- அவன் கையில் உள்ள சார்ங்கம் என்னும் வில்லிலிருந்து பாயும் அம்புமழை போல் தாமதமின்றி மழை கொட்ட வேண்டும்.
- அதனால் உலகம் உய்யவும் நாங்கள் நீராடவும் செய்து மகிழ்விப்பாய்.

478.

- மாயாவதாரனும், நிலைத்த பகவத்தன்மை பொருந்திய வடமதுரை மன்னனும்,
- தூய்மையும் பரப்பும் கொண்ட யமுனை நதிக்கரையில் வளர்ந்தவனும்,
- ஆயர்குலத்தில் தோன்றிய நந்தா விளக்கும்,
- தான் உதித்த தாயின் உதித்தவற்றை விளங்கும்படியாகச் செய்து தாமோதரனான கண்ணனை

- நாம் பரிசுத்தமாக வந்து, சிறந்த மலர்களைக் கொண்டு அர்ச்சனை செய்து வணங்கி
- வாயால் அவன் புகழைப் பாடி மனத்தால் அவனைத் தியானித்தோமானால்
- நாம் அறியாது செய்த பாவங்களும்,
- அறிந்து செய்யும் பாவங்களும் நெருப்பிலிட்ட தூசு போல் அழிந்து விடும்.

179. பறவைகள் சப்திக்கின்றன; சுருடனுக்குத் தலைவனான நம்பெருமானார் ழுத்தருளிய திருக்கோயிலில் ஒலிக்கும் வெண்மையான சங்கின் பெரும் சப்தம் பா காதில் படவில்லையா? அனுபவம் இல்லாத பெண்ணே ! எழுந்திராய், முதல் மாலும் அரக்கியின் நச்சுப் பாலை உண்டவனும், வண்டிச் சக்கர வடிவில் என்னைக் கொல்ல வந்த சகடாசுரனை தொறுக்கி மாய்க்கத் தன் திருவடியைத் தாக்கியவனும், திருப்பாற்கடலில் ஆதிசேஷன் மேல் பள்ளி கொண்டுள்ள அலதாரங்களுக்குக் காரணானுமான திருமாலை முனிவர்களும், யோகிகளும் தங்கள் பாளத்திற் கொண்டு, நிதானமாக எழுந்து அரி, அரி' என்று பலமுறை சொல்லும் பெரும் சப்தம் நம் உள்ளம் புகுந்து குளிர்ந்தது

480. மதிகெட்ட பெண்மணியே! சுக்க என்று வலியன் என்னும் கரிக் தன்கள் இரை தேடப் புறப்படும் முன் ஒன்றுடன் ஒன்று கலந்து உறவாடும் மகும் சப்தத்தை, நி கேட்கவில்லையா? நறுமனம் வீசும் கூந்தல் உடைய ஆயாசியர்கள் அணிந்துள்ள அர்சுத்தாலி, ஆமைத்தாலி கலகலவென்று ஒலிக்கக் களை வீசி மத்தினால் தயிர் கடையும் சப்தத்தை கேட்க வில்லையா? தலைமையான பெண்ணே ! நாராயனானாகிய மூர்த்தியை, கேசவனை நாங்கள் பாடுவதைக் கேட்டும் நீ படுத்துக் கிடக்கிறாயே, ஒளி பொருந்தியவளே! கதவைத் திறவாய்.

481. உள்ளக் களிப்புள்ள பெண்மணியே! கிழக்கே வானம் வெளுத் தங்கள். எருமைகள் நுனிப்புல் மேப் பரவலாகச் செல்கின்றன. நோன்பு நோற்கும் இடத்திற்குப் பலர் சென்று விட்டனர். மீதமுள்ளவர்களும் அங்கு பரப்படுகின்றனர். அவர்களைப் போக விடாமல் தடுத்து நிறுத்தி உன்னை அழைத்துச் செல்ல வந்துள்ளோம், எழுந்திரு; கேசி என்னும் குதிரை வடிவில் சத்த அசுரனை வாய் பிளந்து, கம்சனால் அனுப்பப்பட்ட மல்லர்களை அழித்த தேவர்களுக்கெல்லாம் தேவனை நாம் சென்று பாடி,

பறையைப் பெற்று வணங்கினால் 'ஆ! ஆ என்று நம்முடைய கோரிக்கையை அப்பெருமான் தராய்த்து அருள்புரிவான்

482. மாசற்ற மாணிக்கங்கள் பதித்த மாளிகையில் எல்லாத் திசையிலும் விளக்குகள் எரிய, அகிற் புகையின் நறுமணம் தவழ, தூங்குவதற்கான படுக்கையில் உறங்குகின்ற மாமன் மகளே! மாணிக்கக் கதவின் தாழ்ப்பாளைத் திறந்து விடு. (அவள் அசையாமல் உறங்கிக் கொண்டிருக்க அவள் தாயிடம் முறையிடு மாமியார்! அவளை எழுப்புவீர்களா? உங்கள் மகள் ஊமையோ செவிடோ? ஆழ்ந்த தூக்கமோ? அல்லது நெடு நேரம் தூங்கும் ◌ினால் கட்டுப்பட்டாளோ? மாமாயன், மாதவன், வைகுந்தன் என்னும்

அவனுடைய பல திருநாமங்களைப் பாடினோம்

483. கண்ணனை அனுபவிக்க முற்பிறப்பில் தவம் செய்து, இப்போது நகத்தை அனுபவிக்கும் தலைவியே! வாயிற்கதவைத் திறவாது இருப்பவர் ஒரு மறுமொழியாவது சொல்ல மாட்டோர்களோ? நறுமணமுள்ள திருத் துழாயை முடியில் அணிந்த எம்பெருமான் நம்மால் போற்றப்படும் நிலையில் நமது நோன்புக்கு வேண்டிய பறையைத் தரக்கூடிய உபாயமானான். (அப்படி இருக்கவும் நீ உறங்குகின்றாயே! இது தகுதியோ?). முன்னொரு காலத்தில் இராமபிரானால்) இயமன் வாயிலே விழுந்த கும்பகருணன் என்பவனும் உனக்குத் தோற்றுப்போய், தன் பெரிய தூக்கத்தை உன்னிடம் கொடுத்து விட்டானோ? மிகவும் சோம்பலை உடையவளே! கிடைத்தற்கரிய ஆபரணம் போன்றவளே, தெளிவுடன் வந்து கதவைத் திறப்பாயாக

484. கன்றுகளோடு கூடிய பல பசுக்களின் கூட்டங்களைக் கறந்து பகைவர்களுடைய வலிமை கெடும்படி, சென்று போர் செய்யும் ஒருவகைக் குற்றமும் இல்லாத இடையர்களுடைய அழகிய கொடி போன்றவளே! பாம்பின் படம் போன்ற அல்குலையும், காட்டில் வாழும் மயில் போன்ற சாயலையும் உடையவளே! எழுந்து வருவாய், செல்வத்தையுடைய பெண் தன்மையை ஆள்பவளே! உன்னுடைய முன்வாசலிலே உறவுமுறையுடைய தோழிகள் பாவரும் வந்து புகுந்து மேகம் போன்ற திருநிறமுடைய கண்ணனது திருநாமத்தைப் பாட, அதைக் கேட்டு நீ அசையாமலும் மறுமொழி சொல்லாமலும் உறங்கும் செயல் எப்பயனை எண்ணி?

485.இளங்கன்றையுடைய எருமைகள் (பாலைக் குறவாமையால்) கதரிக் கொண்டு தமது கன்றுகளிடம் மனமிரங்கி, அக்கறை நினைப்ப தால், முலைக் காம்பின் வழியாக நிலையாக பால் பெருக, அதனால் லிதி முழுவதும் ஈரமாக்கி, சேறாக்குகின்ற, மிக்க செல்வத்தை உடையவனது தங்கையே! நாங்கள் பனியாளது எங்கள் தலை மீது விழ, உனது தலை வாசலைப் பிடித்துக் கொண்டு தனது கோபத்தால் இராவணனைக் கொன்ற ஒனத்துக்கினியனான ஸ்ரீராமனைப் பாடும் போதும் நீ வாயைத் திறக்காமல் இருக்கிறாய். எல்லா வீட்டிலுள்ளவர்களும் துயிலுனர்ந்த பின்னரும் நி பெருந்தாக்கம் தூங்குவது ஏன்? இனியாவது எழுந்திராய்

486.பறவையின் உருவைக் கொண்டு வந்த பகாசுரனுடைய வாயைப் பிளந்தவனும், பெரும் பொல்லாங்கு செய்த இராவணனுடைய பத்துத் ப ளையும், மிகவும் எளிதாக அறுத்து அழித்தவனுமான பெருமானது ரிகங்களைப் பாடிக் கொண்டு போய் எல்லாச் சிறுமியரும் பாவை நோன்பு நோற்குமிடத்துக்குச் சென்று சேர்ந்தார்கள். (இவ்வளவு கூறிய பின்பு, உறங்குபவள் பொழுது விடிந்து விட்டதோ என்ன? என்று கேட்க, அதற்கு எழுப்புபவர்கள் மறுமொழி கூறுகிறார்கள்;) சுக்கிரன் உதித்துக் குரு சீரகம் அஸ்தமித்து விட்டது. கூட்டிலிருந்து வெளியே சென்ற பறவைகளும் இரைதேடும் இடங்களில் ஒலித்தன. தாமரைப் பூவையும், மானையும் ஒத்த கண்களை உடையவளே! பதுமை போன்றவளே! நீ நல்ல நாளில் (கிருஷ்ண சரிதத்தை நினைத்துக் கொண்டு தனியே இருத்தலாகிய கபடத்தை விட்டு) எங்களோடும் கூடி உடம்பு வவ்வலிடும்படித் துளைந்து விளையாடி நீராடாமல் படுக்கையில் கிடப்பாயோ? இது தகுதியன்று. எழுந்திராய்

487. உங்கள் வீட்டுப் புறங்கடையில் உள்ள தோட்டத்தில் இருக்கிற வாவியிலே செங்கழுநீர் மலர்கள் மலர்ந்து, ஆம்பல் மலர்கள் குவிந்தன காவி உடை தரித்த சந்நியாசிகளும் தங்களுடைய கோயிலிலே சங்கிடும் பொருட்டுப் போகின்றனர். எங்களை முன்னே வந்து எழுப்புவதாகச் சொல்லி இன்னும் படுத்திருக்கும் நங்கையே! வெட்கமற்றவளே! நாவுடையவளே சங்கு சக்கரங்களை ஏந்தியுள்ள பெரிய கைகளை உடையவலும், தாமரை போன்ற கண்களை உடையவனுமான கண்ணனைப் பாடுவதற்கு எழுந்திரு

488. எல்லே, என்ன ஆச்சரியம்! கிளி போன்ற பேச்சு இனிமை உடைய வளே! இன்னமும் உறங்குகின்றாயோ? என்று எழுப்பப் போனவர்கள் சொல்ல, நங்கையீர்! சிலுசிலுவென்று அழைக்காதீர்கள் 'இதோ எழுந்து வருகிறேன்' என்று எழுப்பப்பட்டவள் சொல்ல, மீண்டும் எழுப்புகிறவர்கள் னது கட்டிச் சொல்லும் வார்த்தைகளால் நீ சாமர்த்தியம் உடையவளாக இருக்கிறாய்.

இதை நாங்கள் முன்பே உன் வாயைக் கொண்டு அறிவோம் என்று கூற, அதற்கு எழுப்பப்பட்டவள், 'நீங்கள்தான் சாமர்த்தியசாலிகள் தானே சாமர்த்தியசாலி யா இருந்தாலும் இருக்கட்டும்' என்றாள். மீண்டும் எழுப்புகிறவர்கள் 'உனக்கென்று வேறுபாடு தனியே கொண்டிருக்கிறாயே என, அவளோ, 'எல்லாரும் வந்துவிட்டார்களோ? என வினவ, இவர் களும், 'வந்துவிட்டார்கள். நீ எழுந்து வந்து கணக்கிட்டுக் கொள்' என்றனர் வலிய குவலயாபீடம் என்ற யானையைக் கொன்றவன், பகைவரை எதிராக நின்று அழிக்க வல்லவனும், மாயனுமாகிய ஸ்ரீ கிருஷ்ணனைப் பாடும் பொருட்டு, விரைவாக நீ எழுந்து வருவாய் என்கிறார்கள்.

489. தலைவராக இருக்கின்ற நந்தகோபருடைய அரண்மனையைக் காப்பவனே! கொடிகள் காணப்படுகின்ற தோரணங்களையுடைய வாயிலைக் காப்பவனே! இடைச் சிறுமியரான எங்களுக்காக மணிகள் கட்டிய கதவின் தாளைத் திறப்பாயாக. மாயனும் நீலமணி போன்ற திருநிறமுடையவனு மான கண்ணபிரான், ஒலிக்கின்ற பறையைக் கொடுப்பதாக நேற்றே எங்களுக்கு வாக்குக் கொடுத்திருக்கிறான். திருப்பள்ளியினின்று எழும்படி பாடும் பொருட்டு, பரிசுத்தர்களாக வந்துள்ளோம். (எனவே) சுவாமி வாயினால் முதன்முதலில் எங்களைத் தடுக்காதீர்! நீ (ஒன்றோடொன்று) சேர்ந்ததான தன்மையையுடைய கதவைத் திறப்பாயாக

490. ஆடையையும் தண்ணீரையும் சோற்றையும் தருமம் செய்கின்ற எமது தலைவனாகிய நந்தகோபனே! எழுந்திருப்பாயாக, கொம்பு போன்ற இளைத்த பெண்களுக்கெல்லாம் கொழுந்து போன்றவளே! எமது தலைவியே! யசோதையே! எழுந்திராய்! ஆகாயத்தை இடமாறும்படி செய்து உயர்ந்து உலகங்களை அளந்து கொண்ட தேவர்களுக்குத் தலைவனே! தூங்காமல் எழுந்திராய். பொன்னாலான வீரக் கழலை அணிந்த பாதங்களை உடைய செல்வா! பலதேவனே! உன் தம்பியும் நீயுமாக உறங்காமல் எழுந்திரு

491. மதன நீர் பெருக்குகின்ற யானையை உடையவனும், (போரிலே ஒருவர்க்கும்) பின்னிடாத தோள் வலிமை உடையவனுமான நந்தகோபர் மருமகளே! நறுமணம் வீசுகின்ற கூந்தலை உடையவளே! தப்பின்னையே கதவைத் திற, கோழிகள் எப்புறத்திலும் வந்து கூவின, குருக்கத்திக் கொடியாலாகிய பந்தலின் மலே குயில் கூட்டங்கள் பல முறை கூவின (கண்ணனோடு விளையாடுவதற்குரிய) பந்து பொருந்திய கைவிரல் களை உடையவளே! உனது கணவன் புகழைப் பாடும் பாடி மகிழ்ந்து வந்து சிறப்புப் பொருத்திய வளை குலுங்கி ஒலிக்க செந்தாமரை மலர் போன்ற கைகளால் கதவைத் திறப்பாயாக

192. குத்து விளக்கானது எரிந்து கொண்டிருக்க, யானைத் தந்தத்தால் அமைந்த கால்களையுடைய கட்டிலில் மெத்தென்றிருக்கிற பஞ்சாலாகிய மெத்தையின் மேலேறி, கொத்தாக மலரும் மலர்களைக் கொண்டு முடித்த கூந்தலை உடைய நப்பின்னையின் கொங்கை மேல் வைத்துக் கொண்டு தூங்குகிற மலர் மார்பனே! வாய் திறந்து ஒரு வார்த்தை சொல்வாய். மை நீட்டிய பெரிய கண்களை உடையவளே! உன் கணவனை எவ்வளவு நாழிகை ஆனாலும் தூக்கத்தினின்றும் உணர்ந்து எழுந்திருக்க சம்மதியாதிருக் சிறாய். ஒரு நிமிட காலம் என்றாலும் கண்ணனைப் பிரிந்து பொறுத்திருக்கும் வல்லமையைப் பெற்றிருக்கவில்லை. நீ இப்படி இருப்பது உண்மையாக உனக்குத் தகுதியன்று.

493. முப்பத்து முக்கோடி தேவர்களுக்கு (துன்பம் நேருவதற்கு) முன்னமே போய் (அவர்களுக்கு வரக்கூடிய) நடுக்கத்தைப் போக்குகின்ற ருக்கனே! நித்திரை நீங்கி எழுந்திருப்பாய், (பக்தர்களைக் காக்கவல்ல) தேர்மை உடையவனே! (தீயோரை அழிக்கும்) வல்லமை உடையவனே! பகைத்தவர்க்குத் துக்கத்தைத் தருகின்ற குற்றமற்றவனே! துயில் எழாய் பொற் கலசங்களைப் போன்ற மென்மையான தனங்களையும், செந்நிற மான போயையும், சிறிய இடையையும் உடைய திருமகள் போன்றவளே! நப்பின்னைப் பிராட்டியே! உறக்கம் நீங்கி எழுந்திருப்பாயாக! நோன்புக்கு வேண்டிய திருவால வட்டத்தையும் (விசிறி) கண்ணாடியையும் உளது கணவனையும் எங்களுக்குக் கொடுத்து இப்போதே எங்களை நீராடச் செய்வாயாக

494. (பாலைக் கறக்குமாறு) கொண்ட பாத்திரங்கள் (நிறைந்து) மேலே எதிராகப் பொங்கி வழியும் படியாக இடைவிடாமல் பாலைச் சுரந்து தருகின்ற கொடைக்குணம் உடைய பெரிய பசுக்களை மிகுதியாக உடைய தந்தகோபரது மகனே! எழுந்திருப்பாய்! வேதங்களில் வான்றி இருப்பவனே அவ்வேதங்களினாலும் காண முடியாதபடி பெருமை உடையவனே! உலகில் திரு அவதரித்து நின்ற ஒளிவடிவானவனே! உறக்கம் நீங்கி எழுந்திருப்பா யாக, பகைவர்கள் உன்னோடு போரிட, வலிமை ஒழிந்து எதிர்த்து நிற்க முடியாமல் உன் வாசலிலே வந்து, உனது திருவடிகளை வணங்குவது போல, நாங்களும் உன்னைக் கொண்டாடிக் கொண்டு உனக்குப் பல்லாண்டு பாடி வந்தோம்

495. அழகிய விசாலமான உலகத்தை அரசாட்சி செய்த அரசர்கள் (இந்த உலகம் நம்முடையது என்று கொண்டிருந்த) புறப்பற்று நீங்கப் பெற்று, நின்

பள்ளிக் கட்டிற் கீழே வந்து திரள் திரளாக இருப்பவர் போல (நாங்கள் உனது குணங்களில் ஈடுபட்டு பெண்கள் என்ற அபிமானம் ஒழிந்து) உன்னிடம் வந்து கிட்டப் பெற்றோம். சிறிதே மலர்ந்த தாமரைப் பூப்போல சிறிது சிறிதாக (வாத்ஸல்ய குணம் தோன்றும்படி) சிவத்துள்ள உன் திருக்கண்கள் அடியாரான எங்கள் மேல் விழித்தலாகாதோ? சந்திரனும் சூரியனும் ஒரு சேரத் தோன்றியது போல (கருணையையும் சீற்றத்தையும் ஒருங்கே கொண்ட) அழகிய கண்கள் இரண்டையும் கொண்டு எங்களிடத் துள்ள பாவம் (பிரிவுத் துயரம்) நீங்கும்படி எங்களைக் கடாட்சிப்பாயாக

496. மழைக் காலத்தில் மலைக் குகையில் படுத்துறங்கும் பெருமை உள்ள சிங்கம் உறக்கம் தெளிந்து நெருப்புப் பொறி பறக்க விழித்து, தனது மணமுள்ள உளை மயிர்கள் நெறிக்க, நான்கு பக்கமும் புடை பெயர்ந்து உடம்பை உதறி பெருமை தோன்ற நிமிர்ந்து கர்ஜித்து, குகையிலிருந்து வெளிப்பட்டு வருவது போல, காயா மலர் போன்ற நிறத்தவனே! நீ உனது இருப்பிடத்திலிருந்து நாங்கள் இருக்கிற இங்கே, அருள் கொண்டு வந்து பல வேலைப்பாடுகள் பொருந்தியுள்ள சிறந்த சிங்காசனத்தில் வீற்றிருந்து தாங்கள் வந்திருக்கும் காரியத்தை ஆலோசித்துக் கருணை செய்வாயாக

497. மகாபலி உலகங்களை எல்லாம் கவர்ந்து கொண்ட) அக்காலத்தில் இந்த உலகங்களை எல்லாம் அளந்தவனே! உனது திருவடிகள் வாழ்க இராவணன் உள்ள) அந்த இடத்திலே நடந்து போய் தென் இலங்கையில் உள்ளாரை அழித்தவனே! உனது சாமர்த்தியம் வாழ்க! சகடாசுரன் அழியும்படி உதைத்தவனே! உனது புகழ் வாழ்க! கன்றின் வடிவாய் வந்த வத்சாசுரனை எறிதடியாகக் கொண்டு, விளங்கி வடிவாய் வந்த கபித்தாசுரன் மேல் வீசியவனே! உனது திருவடிகள் வாழ்க! கோவர்த்தன மலையைக் தடையா எடுத்துப் பிடித்தவனே! உனது குணம் வாழ்க! பகைவர்களை வென்று அழிக்கின்ற உன் கையிலுள்ள வேலாயுதம் வாழ்க! என்று பலவற்றையும் சொல்லி, உனது வீரச்செயலைக் குறித்து, நோன்புக்கு வேண்டிய பறையைப் பெற்றுக் கொள்ள இங்கு வந்தோம். இந்த விஷயத்தில் நீ மனம் இரங்குவாயாக.

498. ஓர் இரவில் தேவகி என்ற ஒருத்திக்குப் புத்திரனாகத் தோன்றி, வேறொருத்தியாகிய யசோதைக்குப் புத்திரனாய் மறைந்து வளர, (அவ்வாறு வளருவதைக் கேட்டுப்) பொறுக்காதவனாய் (உன்னால் நாசமடையப் போகின்ற) தானே (எப்படியாவது உன்னைக் கொல்ல வேண்டுமென்று)

தீமையை எண்ணின கம்சனது எண்ணத்தைத் தவறச் செய்து, அவன் வயிற்றில் நெருப்புக்குச் சமமாக (அச்சத்தை உண்டாக்கிக் கொண்டு) இருந்த (அடியவரிடம்) பெருங்கருணை உள்ளவனே! உன்னை இரந்து கொண்டு வந்தோம். எமது வேண்டுகோளைத் தருவாயானால் (அதனைப் பெற்று) திருமகளுக்கு ஏற்ற உனது செல்வத்தையும், உனது வீரத்தையும் நாங்கள் சொல்லிப்பாடி வந்த சிரமும் நீங்கி, மகிழ்ச்சியடைந்திருப்போம்.

499. அடியாரிடம் விருப்பமுடையவனே! நீலமணி போன்ற நிறமுடைய வனே! உலகம் அழியும் காலத்தில் ஆலிலையில் கண் வளர்பலனே பெரியோர்கள் செய்யும் மார்கழி நீராடுவதற்கு வேண்டுவனவற்றைக் கேட்பாயானால் சொல்லுகிறோம். பகைவர் நடுங்கும்படி ஒலிக்கின்ற பேரோசை உடைய பால் போன்ற நிறமுடைய உனது பாஞ்சசன்யம் என்னும் சங்கை ஒத்த சங்கங்கள் தேவை. மிகவும் பெரிய பறைகள் தேவை. பல்லாண்டு பாடுவோர் தேவை. அழகிய தீபங்களும், கொடிகளும் மேற்கட்டியும் ஆகிய இவற்றைத் தந்து அருள்வாயாக..

500. பகைவரை வெல்லும் சிறப்புடைய கோவிந்தனே! நீயும் தால்களும் சேர்ந்திருந்து மனம் குளிர்ந்து நாட்டில் உள்ளவர் கொண்டாடுகின்ற தன்மையாக கேடகமும், தோள்வளையே, தோடே, கர்ணப் பூவும் மாடகமும் என்று சொல்லப்படுகின்ற ஆபரணங்களையும் தீ அணி வசிக்க நாங்கள் இனிதாக அணிந்து கொள்வோம். அதன் பின்னே நீ உடுத்த இனிய பட்டாடைகளை எடுத்துக் கொள்வோம். பின்பு பாற்சோறு மறையுமாறு தெய்யை வார்த்து அதை முழங்க வழியாகப் பெருகும்படி உண்போம் உபயமான உன்னைப் புகழ்ந்து பாடி நோன்புக்கு வேண்டிய பறையைப் பற்றுக் கொண்டு விரதத்தை முடிப்போம். இவையே நாங்கள் அடைய ஆம்பிய சன்மானங்களாம்

501. நாங்கள் பசுக்களின் பின்னேயே சென்று காட்டை அடைத்து உடம்பை வளர்ப்போம். மேலும் நாங்கள் சிறிதும் புத்தியில்லாத இடைக் தலத்திலே பிறந்து உன்னை எங்களுடைய பிறவியாகப் பிறக்குமளவு புண்ணியம் உடையவர்களாய் இருக்கிறோம். ஒரு வகையாலும் ஒரு குறையும் இல்லாமலிருக்கிற கோவிந்தனே! உன்னோடு எமக்கு உள்ள உறவு நீக்க முடியாதது. சிறு பெண் பிள்ளைகளாய் இருக்கிற நாங்கள், உன்னிடத்திலுள்ள பக்தியினால் உன்னைச் சிறு பேரை இட்டு அழைத்தது பற்றி அருள் கொண்டு கோபியாது இரு. தலைவனே! எங்களுடைய தோன்புக்கு வேண்டிய பறையைத் தருவாயாக

502. மிக்க விடியற்காலத்திலேயே நீ இருக்குமிடத்தில் வந்து உன்னை வணங்கி, உன் அழகிய தாமரை போன்ற திருவடிகளையே நாங்கள் மங்களாசாசனம் செய்கின்றதன் பயனைக் கேளாய். நீ மாடுகளை மேய்த்து ல் உண்டது கண்டபின் உண்கின்ற கலத்திலே பிறந்து, எங்களிடம் பணிவிடைகளைக் கொள்ளாமல் விட்டு விடுவது உனக்குத் தகாது இப்போது நாங்கள் வந்தது பறையைக் கொள்ளும் பொருட்டாக அன்று கோவிந்தனே! நாங்கள் எப்போதும் நீ எடுக்கும் எந்த அவதாரத்திலும் இப்போது இருப்பது போலவே உன்னோடு பொருந்தியவர்களாகவே இருக்க வேண்டும். உனக்கே அடிமை செய்பவர்களாகவும் வேண்டும் இவற்றை விட வேறுபட்ட எங்கள் விருப்பங்களைப் போக்குவாயாக

503. சந்திரன் போன்ற அழகிய முகத்தை உடையவரும், அழகிய ஆபரணங்களைப் பூண்டவருமான இடைச் சிறுமியர், கப்பல்களை உடைய திருப்பாற்கடலைக் கடைந்த மாதவனையும், கண்ணனையும், சென்று அடைந்து மங்களாசாசனம் செய்து அங்கே கண்ணன் சன்னிதியில் தங்கள் புருஷார்த்தத்தைப் பெற்ற அந்தச் செய்தியை, அழகிய ஸ்ரீ வில்லிபுத்தூரில் திரு அவதரித்த தாமரை மலரால் ஆகிய குளிர்ந்த மாலையை அணிந்துள்ள பெரியாழ்வாருடைய திருமகளான ஸ்ரீ ஆண்டாள் அருளிச் செய்த சங்கத் தமிழ்ப் பாமாலையாகிய இம்முப்பது பாசுரங்களையும் ஒரு பாசுரமும் குறை யாது இங்கு அனுசந்திப்பவர்கள், நான்கு பெரிய மலைகளைப் போன்ற திருத்தோள்களையும், சிவந்த திருக்கண்களையும், அழகிய திருமுகத்தையும் கொண்ட உபய விபூதியை உடைய திருமாலால் இம்மை, மறுமை என்ற எல்லா இடங்களிலும் அப்பரமனுடைய பெருங் கருணையை அடைந்து எம்பெருமானுடைய சேர்க்கையால் உண்டான பரமானந்தத்தைப் பெறுவர்

திருப்பாவை உரை முற்றிற்று